பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 74

சனிக்கிழமை
08 பெப்ரவரி 2025

தை 26 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

**கச்சதீவில் 9,000 பேர் குவிவார்கள்**
» 03

இலங்கையில் மீண்டும்
**மருத்துவ நெருக்கடி உருவாகும் அபாயம்**
» 05

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையிலிருந்து

# அமெரிக்காவின் வெளியேற்றம் இலங்கைக்கு கூடுதல் சாதகம்

**கொழும்பு, பெப்ரவரி 8**

**ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இருந்து அமெரிக்கா வெளியேறவுள்ளமை, இலங்கைக்குக் கூடுதல் சாதகமான விடயம். இந்த வாய்ப்பை இலங்கை சரிவரப் பயன்படுத்தவேண்டும் என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் முன்னாள் தவிசாளரும், கொழும்பு பல்கலைக்கழக ஸ்ரீபாளி வளாகத்தின் தலைவருமான கலாநிதி பிரதிபா மஹா நாமஹேவா தெரிவித்துள்ளார்.**
☞ 11

## இலங்கைக்கு $3 பில்லியன்!

*அதிகாரிகள் இணக்கம்*

கொழும்பு, பெப். 8
சர்வதேச நாணயநிதியத்தின் அடுத்தகட்ட கடன் வழங்கலின் கீழ், இலங்கைக்கு 3 பில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்குவது தொடர்பில் அதிகாரிகள் மட்டத்தில் இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.
சர்வதேச நாணயநிதியத்தின் பிரதிநிதிகளுக்கும், ஜனாதிபதி அநுரகுமாரவுக்கும் இடையில் நேற்று
☞ 10

## இந்திய மீனவர்களில் இருவருக்குக் கடூழியம்

*13 பேருக்கு ஒத்திவைப்புச் சிறை!*

மன்னார், பெப். 8
மன்னார் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடித்த இந்திய மீனவர்களில் இருவர், இரண்டாவது தடவையாகவும் அத்துமீறியதால் அவர்களுக்கு இரண்டு வருடங்கள் கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.
☞ 11

## லசந்த விவகாரத்தில் புதிய குற்றப்பத்திரம்?

*அரசு பரிசீலனை*

கொழும்பு, பெப். 8
லசந்த விக்கிரமதுங்கவின் படுகொலை தொடர்பில், புதிய குற்றப்பத்திரம் தாக்கல் செய்வது தொடர்பில் பரிசீலனையில் ஈடுபடவுள்ளதாக பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.
☞ 11

முச்சந்தி முரளி



'மனுநீதிச் சோழர் பரம்பரையில வந்தவை இப்ப பனருக்கு நீதி கேக்கிற நிலை கண்டியளோ'

*பதாகை விவகாரம்*

## மாவை குடும்பத்திடம் பொலிஸார் விசாரணை!

யாழ்ப்பாணம், பெப். 8
இலங்கைத் தமிழரசுக் கட்சியின், காலமான பெருந் தலைவர் மாவை சேனாதிராஜாவின் குடும்பத்தினரிடம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்ட விடயம்
☞ 11

## ரஷ்ய இராணுவத்தில் 584 இலங்கையர்கள்!

*59 பேர் இதுவரை பலி*



கொழும்பு, பெப். 8
உக்ரைனுக்கு எதிரான போருக்காக, ரஷ்ய இராணுவத்தில் இதுவரை 584 இலங்கையர்கள் இணைக்கப்பட்டுள்ளனர். அவர்களில்
☞ 11

## 19 பவுண் திருட்டு இளைஞர் கைது!

» 11

## மின்சாரம் தாக்கி பாலகி உயிரிழப்பு

புளியங்குளத்தில் சோகம்

வவுனியா, பெப். 8
புளியங்குளம், பழையவாடி பகுதியில் மின்சாரம் தாக்கி சிறுமி ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார். ந.மதுசாளினி (வயது-6) என்ற சிறுமியே உயிரிழந்தவராவார்.
☞ 11

இலங்கைச் சிறையிலுள்ள

## இந்திய மீனவர்களை உடன் விடுவியுங்கள்

*இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்ற வளாகத்தில் ஆர்ப்பாட்டம்*

» 11

## தேசிய கால்பந்தாட்டம்; மகாஜன சம்பியன்!

யாழ்ப்பாணம், பெப். 8
இலங்கைப் பாடசாலைகள் கால்பந்தாட்டச் சம்மேளனம் தேசிய மட்டத்தில் நடத்திய தொடரில், 14 வயதுப் பெண்கள் பிரிவில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி சம்பியனானது.
☞ 11

*ராஜபக்சக்கள் இல்லாமல்*

## அரசாங்கத்துக்கு அரசியலில்லை!

*நாமல் ராஜபக்ச காட்டம்*



கொழும்பு, பெப். 8
ராஜபக்சக்களின் நாமத்தை உச்சரித்தால்தான் தமது இருப்பைத் தக்கவைத்துக்கொள்ளலாம் என அரசாங்கம் கருதுகின்றது. ராஜபக்சக்கள் இல்லாவிட்டால் இவர்களுக்கு அரசியல் இல்லை என்பதே உண்மை என்று நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.
☞ 11

## யாழ். இந்து முன்னிலை!

யாழ்ப்பாணம், பெப். 8
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கும், கொழும்பு இந்துக் கல்லூரிக்கும் இடையிலான 'இந்துக்களின் போர்' கிரிக்கெட் ஆட்டத்தில்,
☞ 11

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கொவிசெத**
திகதி 07.02.2025
சீட்டிழுப்பு இலக்கம் 3982
ஆங்கில எழுத்து G
வெற்றி இலக்கங்கள் 21 31 34 78
விசேட எழுத்து G

**ஹந்தஹஎ ராசி சுப பலன்**
திகதி 07.02.2025
சீட்டிழுப்பு இலக்கம் 1049
வெற்றி இலக்கினம் துலாம்
வெற்றி இலக்கங்கள் 10 28 32 48

**NLB ஜய**
திகதி 07.02.2025
சீட்டிழுப்பு இலக்கம் 0008
ஆங்கில எழுத்து X
வெற்றி இலக்கங்கள் 5 7 8 3

**மெகா பவர்**
திகதி 07.02.2025
சீட்டிழுப்பு இலக்கம் 2088
ஆங்கில எழுத்து E
சுப்பர் இலக்கம் 01
வெற்றி இலக்கங்கள் 09 25 65 79

**மஹஜன சம்பத**
திகதி 07.02.2025
சீட்டிழுப்பு இலக்கம் 5740
ஆங்கில எழுத்து O
வெற்றி இலக்கங்கள் 4 8 9 5 6 6

**தன நிதானய**
திகதி 07.02.2025
சீட்டிழுப்பு இலக்கம் 1770
ஆங்கில எழுத்து N
வெற்றி இலக்கங்கள் 09 40 49 55
விசேட எழுத்து N

**அத சம்பத**
திகதி 07.02.2025
சீட்டிழுப்பு இலக்கம் 315
ஆங்கில எழுத்து O
வெற்றி இலக்கங்கள் 9 5 6 6

# புலிகளின் தளத்துக்கு ஆடுகின்றதாம் அரசு!

## கூறுகின்றது பெரமுன

கொழும்பு, பெப்.8

**புலிகளுக்குத் தேவையானவற்றையே தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் செய்துவருகின்றது. அதன் ஓர் அங்கமாகவே மஹிந்த ராஜபக்சவை வெளியேற்றுவதற்குரிய ஏற்பாடு இடம்பெறுகின்றது.**

இவ்வாறு பெரமுனக் கட்சியின் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

கோல்பேஸ் போராட்டத்துக்கு டயஸ்போராக்களும், புலிகளுமே ஜே.வி.பியினருக்கு ஒத்துழைப்பு வழங்கினர். வரலாற்றில் என்றுமில்லாத வகையில் புலிகளின் ஆதரவு தற்போதைய அரசாங்கத்துக்கு இன்று கிடைக்கின்றது. அதனால் புலிகளுக்குத் தேவையானதுதான் தற்போது செய்யப்படுகின்றது. மஹிந்த ராஜபக்சவை அரச வதிவிடத்திலிருந்து வெளியேற்றுவதற்கான ஏற்பாடுகூட இதன் ஓர் அங்கமா என்ற சந்தேகம் எழுகின்றது.

நாட்டை பிரிரித்தல், பிரிவினையை ஏற்படுத்துவதற்குரிய சூழ்நிலையை ஏற்படுத்தல் போன்ற நடவடிக்கைகள் இடம்பெறுகின்றதா என்ற சந்தேகம் எழுகின்றது - என்றார். (எ-44)

**சுபிரி தன சம்பத**
திகதி 07.02.2025 தினம் வெள்ளிக்கிழமை
வெற்றி வாரம் 0488
ஆங்கில எழுத்து T
வெற்றி இலக்கம் 1 9 5 2 3 3

**Super Ball DLB**
திகதி 07.02.2025 தினம் வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு வாரம் 2714
ஆங்கில எழுத்து C
வெற்றி இலக்கம் 04 12 39 44


**சனிதா DLB**
திகதி 07.02.2025 தினம் வெள்ளிக்கிழமை
ஆங்கில எழுத்து P
வெற்றி இலக்கம் 10 17 59 74
வெற்றி வாரம் 4875

**SASIRI DLB**
திகதி 07.02.2025 தினம் வெள்ளிக்கிழமை
வெற்றி வாரம் 0617
வெற்றி இலக்கம் 09 38 40

**லக்ன ராசி DLB**
திகதி 07.02.2025 தினம் வெள்ளிக்கிழமை
விருச்சிகம்
வெற்றி இலக்கம் 20 24 27 56
சீட்டிழுப்பு வாரம் 4426

**KAPRUKA DLB**
திகதி 07.02.2025 தினம் வெள்ளிக்கிழமை
ஆங்கில எழுத்து M
சுப்பர் இலக்கம் 01
வெற்றி இலக்கம் 33 43 47 55
வெற்றி வாரம் 1890

**அத கோடிபதி DLB**
திகதி 07.02.2025 தினம் வெள்ளிக்கிழமை
ஆங்கில எழுத்து D
வெற்றி இலக்கம் 07 20 24 59
வெற்றி வாரம் 2540



# உப்பு விலையுயர்வு இறக்குமதி நீடிப்பு!

கொழும்பு, பெப்.8

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் உப்பின் விலையை கருத்திற்கொண்டு உப்பு விலையை அதிகரிக்க தீர்மானித்துள்ளதாக லங்கா உப்பு நிறுவனத்தின் தலைவர் டி. நந்தன திலகா தெரிவித்துள்ளார்.

அதன்படி, 400 கிராம் உப்புப் பக்கெட்டின் விலை 100 ரூபாவிலிருந்து 120 ரூபாவாக அதிகரிக்கவுள்ளது.

ஒரு கிலோ கல் உப்புப் பக்கெற் ஒன்றின் விலை 120 ரூபாவில் இருந்து 180 ரூபாவாகவும் அதிகரிக்கவுள்ளது.

அத்துடன் உப்பு இறக்குமதிக்கு அனுமதிக்கப்பட்ட கால அவகாசம் 28ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச)

# நல்லமா? நல்லமா?

## அநுரவுக்கு சாமர நையாண்டி

கொழும்பு, பெப். 8

நாட்டில் அரிசி இல்லை, மா இல்லை, உப்பு இல்லை, நிலைமை இவ்வாறிருக்கையில், ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க யாழ்ப்பாணத்துக்குச் சென்று நல்லமா? நல்லமா? எனக் கேட்கிறார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தஸநாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் உரையாற்றுகையில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க யாழ்ப்பாணத்துக்கு சென்று மஹிந்த ராஜபக்சவை விமர்சித்து, அங்குள்ள மக்களை மகிழ்வித்துள்ளார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க காங்கேசன்துறைக்குச் சென்று, நல்லமா, நல்லமா? எனக் கேட்கின்றார். ஆனால் நாட்டில் அரிசி இல்லை, மா இல்லை, உப்பு இல்லை.

எதிர்காலத்தில் இந்த அரசாங்கத்துக்கு நல்ல பதில் கிடைக்கும் என்றும் குறிப்பிட்டார். (ச-22, 44)



# அநுரவைச் சந்தித்த முப்படைத்தளபதிகள்

கொழும்பு, பெப்.8

முப்படைகளின் தளபதிகள் நேற்றுமுன்தினம் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவை ஜனாதிபதி செயலகத்தில் சந்தித்துள்ளனர்.

புதிதாக நியமிக்கப்பட்டுள்ள இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் லசந்த ரொட்ரிகோ, கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் காஞ்சன பானகொட, விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் வாசு பந்து எதிரிசிங்க ஆகியோரே ஜனாதிபதியைச் சந்தித்தனர். புதிதாகப் பதவியேற்றுள்ள முப்படைகளின் தளபதிகளும் சம்பிரதாயபூர்வமாக ஜனாதிபதியைச் சந்தித்துக் கலந்துரையாடியதுடன், ஜனாதிபதிக்கு நினைவுப் பரிசுகளையும் வழங்கியுள்ளனர். (எ-இ)

## ரணில் ஆட்சியில்

# தேங்காய் எண்ணெய் இறக்குமதியில் 5.8 பில்லியன் வரி ஏய்ப்பு!

கொழும்பு , பெப். 8

தேங்காய் எண்ணெய் இறக்குமதி செய்யும் நிறுவனங்கள் 5.8 பில்லியன் வரி செலுத்த ஏய்ப்புச் செய்துள்ளதாக பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார். எதிர்க்கட்சி உறுப்பினர் மரிக்கரின் கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே பிரதமர் இவ்வாறு தெரிவித்துள்ளார்,

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் காலத்திலேயே இது நடைபெற்றுள்ளது.

கடந்த நவம்பர் மாதம் 1.7 மில்லியன் கிலோ தேங்காய் எண்ணெய்யும் டிசெம்பர் மாதம் 1.48 மில்லியன் கிலோ தேங்காய் எண்ணெய்யும் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

ஒரு கிலோ சுத்திகரிக்கப்பட்ட தேங்காய் எண்ணெய்க்கு 150 ரூபாவும் சுத்திகரிக்கப்படாத தேங்காய் எண்ணெய்க்கு 125 ரூபாவும் வரியாக அறவிடப்படும் என்றும் பிரதமர் தெரிவித்துள்ளார். (ச-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கச்சதீவுப் பெருவிழாவுக்கு முன்னேற்பாடுகள் பூர்த்தி

## 9,000 பக்தர்கள் எதிர்பார்ப்பு

**யாழ்ப்பாணம், பெப். 8**

**எதிர்வரும் மார்ச் மாதம் 14 மற்றும் 15ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள கச்சதீவுப் பெருவிழாவுக்கான ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. இம்முறை 9 ஆயிரம் பக்தர்கள் பெருவிழாவில் கலந்துகொள்வார்களென எதிர்பார்க்கப்படுகின்றது என்று யாழ்.மாவட்டப் பதில் செயலர் ம.பிரதீபன் தெரிவித்துள்ளார்.**

கச்சதீவுப் பெருவிழா தொடர்பான கலந்துரையாடல் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்றது. அதன் பின்னர் ஊடகங்களுக்கு அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்

இவ்வருடம் இலங்கையைச் சேர்ந்த 4000 யாத்திரிகர்களும் இந்தியாவைச் சேர்ந்த 4000 யாத்திரிகர்களும் மேலதிகமாக உத்தியோகத்தர்கள், ஏனையோர் என ஆயிரம்பேர் உள்ளடங்கலாக 9 ஆயிரம் பேர் இதில் கலந்துகொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

யாத்திரிகர்களுக்கு 14ஆம் திகதி இரவு உணவும், 15ஆம் திகதி காலை உணவும் வழங்குவதற்குரிய ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

போக்குவரத்துக்காக இ.போ.ச பேருந்துகளும் தனியார் போக்குவரத்துத் துறையினரின் பேருந்துகளும் பயன்படுத்தப்படவுள்ளன. 14ஆம் திகதி காலை 4 மணிமுதல் 11.30 வரை யாழ்ப்பாணம் பேருந்து நிலையத்திலிருந்து அந்தப் பேருந்துகள் புறப்படும்.

இந்தியாவில் இருந்து வருகின்ற யாத்திரிகர்களை, சரியான நடைமுறைகளுக்கு அமைவாக வரவேற்று அவர்கள் ஆலய வழிபாட்டுச் செயற்பாடுகளில் கலந்துகொள்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அத்துடன் கடற்போக்குவரத்துச் சேவைக்கான போக்குவரத்துக் கட்டணங்களும் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. நெடுந்தீவில் இருந்து கச்சதீவுக்கான ஒரு வழி கடற்போக்குவரத்துக் கட்டணமாக 1000 ரூபாவும், குறிகாட்டுவன் துறைமுகத்திலிருந்து 1300 ரூபாவாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது- என்றார். கலந்துரையாடலில் யாழ். மறைமாவட்டக் குருமுதல்வர், யாழ். இந்திய துணைத் தூதரக அதிகாரிகள், கடற்படையின் பிரதித் தளபதி, பொலிஸ் அதிகாரிகள் ஏனையோர் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-27,20,125)



# திடீரென தீப்பற்றிய மோட்டார் சைக்கிள்

வவுனியா, பெப்.8

வவுனியாவில் ஏ-9 வீதியில் புறப்படத் தயாரான மோட்டர் சைக்கிள் ஒன்று திடீரெனத் தீப்பற்றி எரிந்துள்ளது. இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றது.

வவுனியா நகரிலிருந்து பயணித்த மோட்டார் சைக்கிள் வவுனியா மகாவித்தியாலயத்தை அண்மித்து நிறுத்திவிட்டு, மீண்டும் புறப்படத் தயாரானபோதே இந்த விபத்து நிகழ்ந்துள்ளது.

மோட்டார் சைக்கிள் சாரதியும் வீதியால் சென்றோரும் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்த போதிலும் மோட்டார் சைக்கிள் பகுதியளவில் எரிந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ச-25,18)

வட்டுக்கோட்டையில்

# மூதாட்டியிடம் நூதனத்திருட்டு

வட்டுக்கோட்டை மாவடிப் பகுதியில் தனியாக வசித்து வந்த வயோதிபப் பெண்ணொருவரின் வீட்டுக்கு மோட்டார்ச் சைக்கிளில் சென்ற நபரொருவர் 50 ஆயிரம் ரூபா பணத்தை நூதனமாகக் கொள்ளையடித்துச் சென்றுள்ளார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-

குறித்த நபர் தான் கமநலசேவைத் திணைக்களத்திலிருந்து வருகிறேன் என்றும், விவசாய அழிவுக்கு நட்டஈடாக உங்களுக்கு இரண்டு லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்ததுடன் அந்தப் பணத்தைப் பெறுவதற்கு 50 ஆயிரம் ரூபா செலுத்த வேண்டும் எனவும் மூதாட்டியிடம் கூறியுள்ளார். இதனை நம்பிய வயோதிபப் பெண்ணும் 50 ஆயிரம் ரூபா பணத்தைக் குறித்த நபருக்குக் கொடுத்த நிலையில் அவர் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார். இந்தநிலையில் பாதிக்கப்பட்ட மூதாட்டி சம்பவம் தொடர்பில் வட்டுக்கோட்டைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். முறைப்பாட்டுக்கமைய பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-66)

# சலுகைகள் வழங்காவிடின் மருத்துவ கட்டமைப்பு வீழும்

கொழும்பு, பெப்.8

இலங்கையில் சுமார் 7,000 மருத்துவர்கள் நாட்டை விட்டு வெளியேறத் தீர்மானித்துள்ளனரெனவும் சுமார் 2 ஆயிரம் மருத்துவர்கள் ஏற்கனவே நாட்டைவிட்டு வெளியேறி வெளிநாடுகளில் பணியாற்றிவருகின்றனர் என்றும் அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் பிரபாத் சுகததாச தெரிவித்துள்ளார்.

2025 வரவு - செலவுத் திட்டம் மூலம் மருத்துவர்களுக்கு சலுகைகளை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

மருத்துவர்களின் கொடுப்பனவு புதுப்பிக்கப்பட வேண்டும். இல்லாதுவிடின் நாடு முழுவதும் உள்ள மருத்துவமனைகளிலுள்ள 7,000 மருத்துவர்களுக்குப் பற்றாக்குறை ஏற்படும். இதனால் நாட்டின் மருத்துவமனைக் கட்டமைப்பு பாதிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-[illegible])




**லோ**ச்சனா எம்.பி.யைப் பற்றித்தான் இண்டைக்கும் கும்மியடிக்க வேண்டியிருக்கு. இவ்வளவுநாளும் தனக்கு பார்லிமெண்டில பேசுறதுக்கு நேரம் தரேலை எண்டதுதான் லோச்சனாவிர புராணமாக் கிடந்தது. தன்னை எதிர்க்கட்சிக்காரர் சேர்க்காததால தான் திசைகாட்டிக்கு சப்போர்ட் பண்ணுறன் எண்டெல்லாம் வீடியோக்கள் விட்டவர். குடிகா ரன் பேச்சு விடிஞ்சால் போச்சு, லோச்சனான்ர பேச்சு வீடியோவோட போச்சு. ஏனெண்டால் செக்கனுக்கு செக்கன் கொள்கை ,கட்சி எல்லாம் மாறக்கூடிய ஒரே உயிரினம் லோச்சனாதான். பச்சோந்திகூட இவ்வளவு வேகமாகக் கலர் மாத்தாது. அதோட அவருக்கு உந்தக் கொள்கை கோதாரி எல்லாம் முதலில தெரியவேணுமே. இப்ப அது முக்கியமில்லை. விசயத்துக்கு வருவம்.

ஆள் தன்ர சிங்கள லோயருக்கு பீஸ் கட்ட வேணும் எண்டு வெளிநாட்டு அன்ரிமாரிட்ட லட்சக்கணக்கில கேட்டவர் எண்டு பட்சி நேற்றுச் சொன்னதெல்லோ. அந்தக் காசெல்லாம் வந்திட்டுதாம். அப்பிடியிருந்தும் லோச்சனான்ர செலவுக்கு காசு பத்தாதாம். இவ்வளவு நாளும் பார்லிமெண்ட் எம்.பி.மார் சொகுசாத் திரியினம் எண்டவருக்கு அங்கவாற சம்பளம் பத்தாது எண்டு தன்ர செயலாளர், ஆய்வு உத்தியோகத்தர், உதவியாளர், ரைவர் எண்டு நாலுபேரின்ர பேரைப் பதிஞ்சு போட்டு அவைக்கு பார்லிமெண்ட் குடுக்கிற காசை அப்பிடியே தன்ர பொக்கெற்றுக்குள்ள போடுறார். அதை அவரே தன்ர வாயால வீடியோவாவும் விட்டிருக்கிறாராம். அப்பிடி அவர் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் குடுத்ததை திசைகாட்டிக்காரர் கடுமையா ஆராயினம். ஏனெண்டால் இப்பிடி பார்லிமெண்டை ஏமாத்தி , மற்றவையின்ர பேரில வாற சம்பளத்தைத் தன்ர தனிப்பட்ட செலவுக்கு ஒரு எம்.பி. பாவிக்கிறது கடும் குற்றம். பார்லிமெண்டையே அவர் ஏமாத்துறார் எண்டுதானே அர்த்தம். இன்னும் சில எம்.பி.மாரும் இப்பிடித்தான் செய்யிறவை. ஆனால் அதை அவை வெளியில, தங்கட வாயால சொல்லுறேலை. ஆனால் லோச்சனாவுக்கு எதைக்கதைக்கோணும், எதைக் கதைக்கக்கூடாது எண்ட ஒண்டும் தெரியாதே. அதால இப்ப தன்ர வாயாலையே பொல்லைக் குடுத்து அடிவாங்க நிக்கிறார்.

அதுக்குள்ள இன்னொரு விசயமும் சொல்லோணும். அநுர யாழ்ப்பாணம் வரேக்க சனங்கள் விழுந்தடிச்சு செல்பி எடுத்ததை 'எங்கட யாழ்ப்பாணத்துக்கு சேர்க்கஸ் காட்ட வாற கழுதையோடையும் சனங்கள் செல்பி எடுக்கிறவை' எண்டு அநுரவை மறைமுகமாக கழுதை எண்டு லோச்சனா சொன்னவர். பகிடி என்னெண்டால் அவர் கழுதை எண்டு சொன்ன அநுரவோட பார்லிமெண்டுக்க செல்பி எடுக்கப் போனமாதம் லோச்சனா போனோட கிட்டப் போனவராம். துஷ்டனைக் கண்டால் தூர விலகு எண்டமாதிரி 'ஒரு ஆணியும் பிடுங்க வேண்டாம். அங்கால போனால் காணும்' எண்டு லோச்சனாவை அநுர துரத்திவிட்டிட்டார். அந்தக் கோபத்திலதான் ஆள் இப்ப அநுரவைக் கழுதை எண்டு போட்டுத்தாக்கினவராம்.

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** தந்தை வழியில் ஆதாயம் கிடைக்கும். மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்கள் வாங்கும் யோகம் உண்டு. அலுவலகத்தில் முக்கிய பொறுப்பு ஒன்றுக்கு உங்கள் பெயரை பரிந்துரைக்க வாய்ப்பு உண்டு.

**இடபம்:** வீண் செலவுகளும் ஏற்படக்கூடும். எதிரிகளால் மறைமுகத் தொந்தரவுகள் ஏற்படக்கூடும் என்பதால் எச்சரிக்கை தேவை. கணவன் மனைவிக்கிடையே இருந்த கருத்து வேறுபாடு நீங்கி அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**மிதுனம்:** குடும்பத்தில் மற்றவர்களை அனுசரித்துச் செல்லவும். வாகனத்தில் செல்லும்போது எச்சரிக்கை தேவை. எதிர்பாராத செலவுகளால் சிலர் கடன் வாங்கவும் நேரிடும். மாலையில் வாழ்க்கைத்துணையால் ஆதாயம் உண்டாகும்.

**கடகம்:** தாய்மாமன் வகையில் எதிர்பார்த்த காரியம் சாதகமாக முடியும். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டாகும். மாலையில் உறவினர்களின் வருகையால் குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உண்டாகும்.

**சிம்மம்:** மனதில் தைரியமும், தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். தந்தை வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். முக்கிய பிரமுகர்களின் அறிமுகம் கிடைப்பதுடன், அவர்களால் ஆதாயமும் கிடைக்கும்.

**கன்னி:** தாயின் அன்பும் ஆதரவும் கிடைக்கும். வயிறு தொடர்பான பிரச்சினைகள் ஏற்படக்கூடும் என்பதால் உணவு விஷயத்தில் கவனம் தேவை. பிள்ளைகளின் தேவைகளை மகிழ்ச்சியுடன் நிறைவேற்றுவீர்கள்.

**துலாம்:** கணவன் மனைவிக்கிடையே சிறுசிறு கருத்து வேறுபாடுகள் ஏற்படக்கூடும் என்பதால் ஒருவரையொருவர் அனுசரித்துச் செல்வது நல்லது. அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரிக்கும். உங்கள் பணிகளை மற்றவர்களிடம் ஒப்படைக்க வேண்டாம்.

**விருச்சிகம்:** எதிர்பார்த்த காரியங்கள் அனுகூலமாக முடியும். வாழ்க்கைத் துணையின் தேவைகளைப் பூர்த்திசெய்வீர்கள். துணிச்சலாக சில முடிவுகளை எடுப்பீர்கள். பிறருக்கு மேல் புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம்.

**தனுசு:** மனதில் சஞ்சலம் ஏற்படும். வீண் செலவுகளால் கையிருப்புக் கரையும். தாய் வழி உறவுகளால் காரிய அனுகூலம் உண்டாகும். வாழ்க்கைத்துணை உங்கள் முயற்சிகளுக்கு ஒத்துழைப்புத் தருவார்.

**மகரம்:** சகோதரர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். மாலையில் உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் மகிழ்ச்சி ஏற்படும். புதிய முறையில் ஆடைகள் வாங்கி மகிழ்வீர்கள். நண்பர்கள் உதவிகேட்டு வருவார்கள்.

**கும்பம்:** திடீர்செலவுகள் ஏற்படும். தேவையான பணம் இருப்பதால் சமாளித்து விடுவீர்கள். பிற்பகலுக்கு மேல் காரியங்களில் அனுகூலம் உண்டாகும். மற்றவர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**மீனம்:** வாழ்க்கைத்துணை வழியில் சுபச்செலவுகள் ஏற்படும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. உங்கள் தேவை அறிந்து மற்றவர்கள் உதவி செய்வார்கள். குடும்பத்தில் மற்றவர்களின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள்.

# யாழ். இந்து மாணவர்களின் 'ரலன்ட் ஷோ' நிகழ்வு

யாழ்ப்பாணம், பெப்.8

யாழ் இந்துக் கல்லூரி மாணவர்களின் 'ரலன்ட் ஷோ' நிகழ்வு யாழ். திருவள்ளுவர் கலாசார மண்டபத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. இதன்போது தேசிய மட்டத்தில் வெற்றியீட்டிய யாழ். இந்து மாணவர்களின் தமிழ் மற்றும் ஆங்கில நாடகங்களுடன் பல்வேறு இசைநிகழ்சிகளும் நடைபெறவுள்ளன.

நிகழ்வு மூலம் பெறப்படும் நிதி முற்றுமுழுதாக யாழ். இந்துக் கல்லூரி இயல் இசை நாடகத்துறையின் விருத்திக்குப் பயன்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது. (ச-25)

# மாணவர்களுக்கு புதிய வகுப்புகள்

யாழ்ப்பாணம், பெப்.7

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பயிற்சி நிலையத்தால் புதிய வகுப்பு மாணவர்களுக்கான புராணபடனம், கதாப்பிரசங்கம், சமஸ்கிருதம் ஆகிய ஆறு மாதகாலப்பயிற்சி சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் நடைபெறவுள்ளன.

இதில் இணையவிரும்புவோர் இந்துசமயகலாசார அலுவல்கள்திணைக்களம், வடபிராந்திய அலுவலகம், குருகுலம், பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி யாழ்ப்பாணம் எனும் முகவரிக்குத் தபாலிலோ அல்லது நேரிலோ வருகைதந்து கற்கவிரும்பும் பாடம், முழுப்பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், அடையாளஅட்டை இலக்கம், கல்வித்தகமை போன்ற விவரங்களைச் சமர்ப்பித்து எதிர்வரும் 28ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கலாம் என இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் ய. அனிருத்தனன் தெரிவித்துள்ளார். (ச-41)

# நூல் வெளியீடு

வவுனியா, பெப். 08

வவுனியா மற்றும் தர்கா நகர் கல்வியியற் கல்லூரிகளின் ஓய்வுநிலை விரிவுரையாளரும், இடதுசாரி அரசியல் செயற்பாட்டாளரும், சுழிபுரம் கே.ஏ.எஸ். சத்தியமனை நூலகத்தின் தலைவருமான கலாநிதி ந.இரவீந்திரனின் "இரு இனத் தேசியங்களில் விடுதலைத் தேசியம்" நூல் வெளியீட்டு நிகழ்வு தேசிய கலை இலக்கியப் பேரவையின் பொதுச் செயலாளர் சட்டத்தரணி சோ.தேவராஜா தலைமையில் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 3.30 மணிக்கு இல. 18/02, திருவடிநிழல், அம்மன் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள எங்கட புத்தகங்கள் இல்லத்தில் இடம்பெறவுள்ளது. ஆர்வலர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டுக் குழுவினர் அழைப்பு விடுத்துள்ளனர். (ச-22)

# மணவாளக்கோலம்

யாழ்ப்பாணம், பெப்.8

யாழ்ப்பாணம் கல்வளை சண்டிலிப்பாய் ஸ்ரீ காளியம்பாளாலய மணவாளக் கோலவிழா எதிர்வரும் திங்கட்கிழமை காலை 8மணிக்கு இடம்பெறவுள்ளது. காளியம்மாளுக்கும் மேனியபரிவாரமூர்த்திகளுக்கும் நூற்றி எட்டு சங்கபிஷேகத்துடன் பூஜை ஆரம்பமாகி மதியம் மகேஸ்வர பூஜையும், மாலை வசந்த மண்டபப்பூஜையும், அம்பிகை ஊஞ்சல் பாட்டும் இடம்பெறும்.

தொடர்ந்து அம்பிகை பூத்தண்டிகையில் வீதியுலா வருவார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-41-63)



ஐ. சிவசாந்தன்



# 'இந்துக்களின் போர்' நேற்று ஆரம்பம்!

யாழ்., பெப். 8

'இந்துக்களின் போர்' என அழைக்கப்படும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கும் கொழும்பு இந்துக் கல்லூரிக்கும் இடையிலான 14 ஆவது துடுப்பாட்டப் போட்டி நேற்று யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகியுள்ளது.

இந்தப் போட்டி இரண்டு இன்னிங்ஸ்களைக் கொண்ட துடுப்பாட்டபோட்டியாக இடம்பெறவுள்ளது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி முதலில் துடுப்பாட்டத்தைத் தெரிவு செய்தது. (ச)

# சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம், பெப்.8

தென்மராட்சி, தனங்களப்பு அறுகுவெளி திருவருள்மிகு ஒதியம்பிட்டியான் முனியப்பர் ஆலய மணவாள கோல சங்காபிஷேக விஞ்ஞாபனம் எதிர்வரும் 10 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.05 மணிக்கு நடைபெறவுள்ளது. மறுநாள் செவ்வாய்க்கிழமை பைரவர் பூஜைகளும் நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச- 25, 63)

# அறநெறிப்பாடசாலைக்கு மாணவர்கள் உள்ளீர்ப்பு

யாழ்ப்பாணம், பெப்.8

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடாத்தும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மாதிரி அறநெறிப்பாடசாலையில் புதிதாக இணையவிரும்பும் மாணவர்கள் தங்கள் பதிவுகளை நாவலர் வீதியில் உள்ள நாவலர் கலாசார மண்டபத்தில் எதிர்வரும் 15ஆம் திகதி முதல் மார்ச் மாதம் 15 ஆம் திகதி வரை மேற்கொள்ளலாம்.

மேலதிக தொடர்புக்கு 0776650648 எனும் தொலைபேசி எண்ணைத் தொடர்புகொள்ளலாம் என இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் யா. அநிருத்தனன் தெரிவித்துள்ளார். (ச-41)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை



நாளொரு நல்வார்த்தை

நீ உன் வலது காலை முன்னே எடுத்து வை; உன் இடது கால் தானாகவே முன்னால் வந்துவிடும்.

– நெப்போலியன் –

# விகாரையில் சட்டம் கடமையைச் செய்யுமா?

தையிட்டியில் திஸ்ஸவிகாரை பொதுமக்களின் காணிகளில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டிருக்கும் நிலையில், அந்தக் காணி விகாரைக்கே சொந்தமானது என்று சாதித்துள்ள அகில இலங்கை பௌத்த மகா சம்மேளனம் என்ற அமைப்பு, அந்தக் காணியை விகாரைக்குக் கையளிக்கவேண்டும் என்று சண்டித்தனப்பாணியில்கடிதம்ஒன்றையாழ்ப்பாணம் மாவட்டச் செயலருக்கு அனுப்பியிருக்கின்றது. அடாத்தாகப் பறிக்கப்பட்டிருக்கும் பொதுமக்களின் காணிகள் அவர்களிடம் மீளக்கையளிக்கப்பட வேண்டும் என்று கடந்த டிசெம்பர் மாதம் நடந்த யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருந்த நிலையில், அந்தத் தீர்மானம் செல்லுபடியாகாது என்று அகில இலங்கை பௌத்த மகா சம்மேளனம் அந்தக் கடிதத்தில் தெரிவித்திருக்கின்றது.

தையிட்டில் அமைக்கப்பட்டிருக்கும் விகாரை உரிய அனுமதிகள் பெறப்படாமல் - ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படாமல் கள்ளத்தனமாக இராணுவத்தினரின் உதவியுடன் கட்டிமுடிக்கப்பட்டிருக்கின்றது. இந்த விகாரை கட்டப்பட்டிருக்கும் காணிகள் பொதுமக்களுக்குச் சொந்தமானவை. அந்தக் காணிகளுக்குரிய ஆணவங்களை அந்த மக்கள் கைவசம் வைத்திருக்கின்றனர். விகாரைக்கு அடிக்கல் இடப்பட்டது முதல் விகாரை அமைக்கப்படுவதற்கு அந்தக் காணிகளின் உரிமையாளர்களான மக்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்திருந்தனர். இந்த விவகாரம் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டங்கள், பிரதேசஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் பிரஸ்தாபிக்கப்பட்டிருந்தன. விகாரையின் கட்டுமானத்தைத் தொடரக்கூடாது என்ற தீர்மானமும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்டிருந்தது. ஆனால் இவை எவற்றையும் கருத்தில் எடுக்காது இந்த விகாரை இராணுவத்தினரின் முழு ஒத்துழைப்புடன் வேக வேகமாகக் கட்டிமுடிக்கப்பட்டது.

பொதுமக்கள் தங்கள் காணிக்குரிய ஆவணங்களை வைத்திருக்கும் நிலையில் - அந்தக் காணிகளில் அவர்கள் இடப்பெயர்வுக்கு முன்னர் வாழ்ந்திருந்த நிலையில் தங்களின் காணிகளைத் தங்களிடம் மீள ஒப்படைக்க வேண்டும் என்ற அவர்களின் கோரிக்கை நியாயமானதே. இந்தக் காணிகள் விகாரைக்குரியவை என்பது உண்மையானால், விகாரைக் கட்டுமானத்துக்கு முன்னரே ஆவணங்களைச் சமர்ப்பித்து - அவை விகாரைக்குரிய காணிகளே என்பதை நிரூபித்து விகாரைக் கட்டுமானத்தைத் தொடர்ந்திருக்க முடியும். ஆனால் பிரதேச செயலகம் உட்பட உரிய திணைக்களங்கள் எவற்றிலும் அனுமதி பெறாமல் இராணுவத்தினரின் -அரசாங்கத்தின் உதவியுடன் அவசர அவசரமாக கள்ளத்தனமாக கட்டவேண்டிய தேவை என்ன?

சட்டவிரோதமாக விகாரையை அமைத்துவிட்டு, இப்போது இன நல்லிணக்கம் பாதிக்கும், மத நல்லிணக்கம் பாதிக்கும் என்று நீலிக் கண்ணீர் விடுவது ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல. பௌத்தர்கள் வாழாத ஓரிடத்தில் பொதுமக்களின் காணிகளைக் கைப்பற்றி சட்டவிரோதமாக விகாரை அமைக்கப்பட்டிருப்பது தான் இன நல்லிணக்கத்தையும், மத நல்லிணக்கத்தையும் பாதிக்கும். சட்டவிரோதமாக உரிய அனுமதிகள் பெறப்படாமல் ஒரு கட்டடம் அமைக்கப்பட்டால் அந்தக் கட்டடம் உரிய நடைமுறைகளின்படி அகற்றப்படுவதே நாட்டில் உள்ள சட்ட நடைமுறை. தனியார் கட்டடங்களாக இருந்தாலும், சமயத் தலங்களாக இருந்தாலும்- இந்த நடைமுறையே நாட்டில் பின்பற்றப்படுகின்றது. உரிய முறையான அனுமதிகள் பெறப்படவில்லை




நாடளாவிய ரீதியில்

# மருத்துவமனைகளில் மருந்துப்பற்றாக்குறை




கொழும்பு, பெப்.8

**கொழும்பு தேசிய மருத்துவமனை உட்பட நாடளாவிய ரீதியில் தேசிய, மாவட்ட மற்றும் பிராந்திய அரச மருந்துவமனைகளில் மருந்து மற்றும் மருத்துவ உபகரணங்களுக்குக் கடுமையான தட்டுப்பாடு நிலவுகின்றது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.**

மருத்துவமனைகளில் உள்நோயாளிகளாக சிகிச்சைபெறும் நோயாளிகளுக்குத் தேவையான பல அத்தியாவசிய மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களை நோயாளிகளின் சொந்தச் செலவில் வழங்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது என்றும் மருத்துவமனைப் பணியாளர்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன் சத்திர சிகிச்சைக்குத் தேவையான சில வகையான மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களை நோயாளிகள் தனிப்பட்ட முறையில் வாங்க வேண்டியுள்ளது என்றும், அவற்றில் சிலவற்றை 25 ஆயிரம் ரூபா முதல் 30 ஆயிரம் ரூபாவரையில் கொடுத்து வாங்க வேண்டியுள்ளது என்றும் சுட்டிக் காட்டப்படுகின்றது.

இந்த விடயத்தில் அரசாங்கம் தலையிடாவிட்டால் நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கவேண்டி ஏற்படும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)



## பலப்படுத்தப்படும் நாடாளுமன்றம்

கொழும்பு. பெப்.8

எதிர்வரும் பெப்ரவரி 17 ஆம் திகதிஅன்று வரவு-செலவுத்திட்டம் நாடாளுமன்றில் முன்வைக்கப்படவுள்ளநிலையில் பாதுகாப்பு ஏற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படும் என்று பிரதி சபாநாயகர் ரிஸ்வி சாலிஹ் அறிவித்துள்ளார்.

அதன்படி, பொதுவாகன நிறுத்துமிடம் மூடப்படும். அழைக்கப்பட்ட விருந்தினர்களுக்கு மட்டுமே நாடாளுமன்றக்காட்சியகம்திறந்திருக்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

மினுவாங்கொடையில்

## துப்பாக்கிச்சூடு ஒருவர் பலி

யாழ்ப்பாணம், பெப்.8

கம்பஹா, மினுவாங்கொடை பிரதேசத்தில் உள்ள பாடசாலை ஒன்றுக்கு அருகில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

35 வயதுடைய ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளில் சென்ற இனந் தெரியாத இருவரால் இந்தத் துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ச-இ)

## நீரில் மூழ்கி வெளிநாட்டுப் பிரஜை சாவு

கஸகஸ்தான் நாட்டுப் பிரஜை ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார். பென்தொட்ட கடலில் மூழ்கி குறித்த வெளிநாட்டுப் பிரஜை உயிரிழந்துள்ளாரெனத் தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)

## இந்திய ஒயில் நிறுவனம் இலங்கையில் கால்பதிப்பு

கொழும்பு . பெப். 8

எரிபொருள் விற்பனையைத் தொடர்ந்து ஒயில் விற்பனையிலும் வெளிநாட்டு நிறுவனங்கள் கால்பாதித்துள்ளன.


அதன்படி இந்தியாவின் முன்னணி ஒயில் விற்பனை நிறுவனமான இந்துஸ்தான் பெற்றோலியம் நிறுவனம் சி வேர்ல்ட் லங்கா நிறுவனத்துடன் இணைந்து இலங்கையில் விற்பனையை ஆரம்பிக்கவுள்ளது. (ச-22,6)

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

நாளை
ஞாயிற்றுக்கிழமை - தை - 27
09.02.2025
சுபநேரம் : 09.35 - 11.05
ராகுகாலம் : 05.05 - 06.35

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



பிறப்பு 22 . 03 . 1941

இறப்பு 05 . 02 . 2025

## கந்தையா பிரபுசிகாமணி

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா பிரபுசிகாமணி (முன்னாள் R.M.O -நயப்பான) அவர்கள் கடந்த 05-02-2025 புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா-சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற வீரசிங்கம்- நவரத்தினமணி தம்பதியரின் அன்பு மருமகனும், பத்மசோதி அவர்களின் அன்புக் கணவரும், விசாகன், வாமலோஜனா, பத்மலோசனி ஆகியோரின் அன்புத் தந்தையும், சசிகலா, வரதராஜன் ஆகியோரின் அன்பு மாமனாரும், யதுமிதன், காருண்யன், தமிழவன், ரஷேஸ்ன், கைலாஷினி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09-02-2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9:00 மணியளவில் 1ம் ஒழுங்கை பருத்தித்துறை வீதியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று நண்பகல் 12.00 மணியளவில் பூதவுடல் தகனத்திற்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

1ம் ஒழுங்கை,
பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

# வவு. ரயில் நிலையங்கள் சாரணர்களால் துப்புரவு

வவுனியா, பெப். 08

சாரணர் இயக்கத்தின் ஸ்தாபகர் ராபர்ட் பேடன் பவல் பிரபுவின் 168 ஆவது பிறந் தநாளை முன்னிட்டு இலங்கை சாரணர் சங்கத்தின் வவுனியா மாவட்டக் கிளை யால் வவுனியா மாவட்டத்திலுள்ள 5 புகையிரத நிலையங்கள் அழகுபடுத்தப் படவுள்ளன.

இந்த வேலைத்திட்டம் எதிர்வரும் 22 ஆம் திகதி காலை 9 மணி முதல் காலை 11.30 மணி வரை இடம்பெறவுள்ளது.

(ச-22, 18)

## பராமரிப்பாளர் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் முதியோர் நோயாளர் பராமரிப்பு நிலையத்திற்கு அனுபவமுள்ள பெண் பராமரிப்பாளர் தேவை

தொடர்பு: 077 712 6859/60
076 252 5725

# மஹா கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், பெப். 8

சண்டிலிப்பாய் சீரணி, அருள்மிகு சீரணி நாகபூசணி அம்பாள் தேவஸ்தான மஹா கும்பாபிஷேகம் நாளைமறுதினம் திங்கட்கிழமை காலை 9.35 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

இன்று சனிக்கிழமை காலை 9 மணி முதல் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணி வரை அடியவர்கள் எண்ணேய்க் காப்பு சாத்தல் இடம்பெறவுள்ளது. கும்பாபிஷேக தினத்தன்று மாலை 5 மணிக்கு பூஜை வழிபாடுகளைத் தொடர்ந்து அம்பாள் பூந்தண்டிகையில் திருவீதி உலாவருவார்.

(ச-25)

சாய்ராம்

# 25 ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

## சுப்பிரமணியம் அம்பலவாணர்

(பிரசித்தி பெற்ற நொத்தாரிசும், வழக்கறிஞரும்)



எம் குடும்பத்தின் குல விளக்காய் இருந்து
எம் அனைவருக்கும் நல்லொளி காட்டிய
எம் அன்புத் தந்தையே
நீங்கள் இவ் உலகை பிரிந்தபோதும்
எங்கள் நெஞ்சங்களில் என்றும் அழியாத
சித்திரமாய் நிறைந்திருப்பீர்கள்.
எங்கள் அன்புத் தந்தையின்
ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

சாயிசக்தி
மகன்மார், மகள்மார், மருமகன்மார்
மருமகள்மார், பேரப்பிள்ளைகள்,
புத்தூர் கிழக்கு, பூட்டப்பிள்ளைகள்.
புத்தூர். 011 252 4118

தோற்றம் 12.06.1918

மறைவு 17.01.2000

(CS/2407) J-1

# ஆத்மசாந்தி அழைப்பும் நன்றி நவிலலும்



மண்ணில் 01 . 07 . 1957

விண்ணில் 06 . 01 . 2025

கடந்த 06.01.2025 திங்கட்கிழமை அன்று சிவபதமடைந்த
எங்கள் குடும்பத் தலைவர்

## அமரர் சுப்பிரமணியம் சிவகுமார்

(ஓய்வுபெற்ற சிறாப்பர் - மாநகரசபை யாழ்ப்பாணம்)

அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நாளை (09.02.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**இவ் அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக் கொள்ளவும்.**

மேலும் அன்னாரின் மரணச்செய்தி கேட்டு நாம் துயருற்று இருந்த வேளையில் நேரில் வந்தும், தொலைபேசியூடாகவும், முகநூல், மின்னஞ்சல், RIPBOOK ஆகியவை மூலமாகவும், எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும், அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், மலர்வளையங்கள், மலர்மாலைகள் சாத்தியவர்களுக்கும், உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் இன்று வரை எமக்கு சகல உதவிகளையும் செய்த அன்பு நெஞ்சங்களுக்கும் எமது குடும்பத்தின் சார்பா மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இராஜவீதி, நீர்வேலி வடக்கு.

(CS/57445) J-1

குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்



மலர்வு 04 . 07 . 1935

உதிர்வு 07 . 02 . 2025

## தம்பித்துரை கனகசபை J.P

யாழ் குமரகோட்டம் கோண்டாவிலை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பித்துரை கனகசபை அவர்கள் நேற்று (07.02.2025) வெள்ளிக்கிழமை சிவபதம் அடைந்தார்

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பித்துரை - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், நல்லலட்சுமி அவர்களின் பாசமிகு கணவரும், பரமேஸ்வரி, அரியரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், சிவாசினி, பாஸ்கரன், செந்தில்நாதன் காலம் சென்ற வனஜா ஆகியோரின் அன்புத் தந்தையும், பூபாலசிங்கம், சந்திராதேவி ஆகியோரின் மைத்துனரும், சாந்தகுமார், நளினி ஆகியோரின் பாசமிகு மாமனாரும், ரூசான், ஹறிணி, திவாஹறி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.02.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

குமரகோட்டம்,
கோண்டாவில்.

(CS/57443) J-1

தகவல் :
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள் மிகு இணுவில் கந்தசுவாமி கோயில்
# தைப்பூச உலகப் பெருமஞ்சத்திருவிழா



**காலம் :** எதிர்வரும் 11.02.2025 செவ்வாய்க்கிழமை
**நேரம் :** காலை 6.00 மணிக்கு **பால்குடப் பவனி** இணுவில் மருதனார்மடம் பல்லப்ப வைரவர் ஆலயத்திலிருந்து ஆரம்பம்

**குறிப்பு:** யாழ். குடாநாட்டின் பல பிரதேசங்களிலும் இருந்தும் பெரும் தொகையான பக்தர்கள் வருடாந்தம் முருகப்பெருமானுக்கு பால்குடம் எடுப்பார்கள் பால்குடம் எடுக்க விரும்புவர் பால்குடத்திற்குரிய அனைத்து பொருட்களும் ஆலயத்தினரால் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.
**முற்பதிவுகள் 10.02.2025 திங்கட்கிழமை ஆலய கருமபீடத்தில் காலை 9.30 -11.00 மணி, மாலை 4.30 - 6.00 மணிவரை மேற்கொள்ளலாம். (பால்குடம் பற்றுச் சீட்டு - 400/-)**

## மாபெரும் பொங்கல்

**(காலை 9.00 - மாலை 3.00 மணிவரை) ஆலயத்திற்குச் சொந்தமான வயலில் இருந்து மாட்டுவண்டிலில் புதிர் எடுத்துவரப்பட்டு புத்தரிசி ஆக்கி பாரம்பரிய முறைப்படி பொங்கல் ஆரம்பமாகும்.**

**குறிப்பு:** தொலைவிலிருந்து வரும் முருகன் அடியவர்கள் வசதி கருதி பொங்கல் பொருட்கள் அனைத்தும் ஆலயத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. **வெண் பொங்கல் பொதி - 1700 /- சர்க்கரை பொங்கல் பொதி 2700/-**

**காலை 9.00 மணிதொடக்கம் 1008 சங்காபிஷேகம், சண்முகர்ச்சனை. விசேடபூஜை அர்ச்சனைகள், இசைநிகழ்ச்சிகள், அன்னதானம், வழிபாடுகள் நடைபெறும்.**

**குறிப்பு : மாலை 6.30 மணிக்கு வசந்தமண்டபப்பூசை இடம்பெற்று ஆறுமுகப் பெருமான் வள்ளி, தெய்வானை சமேதராய் உலகப்பெருமஞ்சத்தில் வீதி வலம் வரும் நிகழ்வும் தமிழரின் பாரம்பரிய கலை நடனங்கள் அத்தனையும் இடம்பெறும்.**

முருகன் அடியவர்கள் அனைவரும் வந்து பால்குடம் எடுத்தும், பொங்கல் பொங்கியும், அர்ச்சனை வழிபாடுகளில் ஈடுபட்டும் உலகப்பெருமஞ்ச வடம் தொட்டு இழுத்தும் தைப்பூச நன்னாளில் தாங்கள் வேண்டும் வரங்கள் அனைத்தையும் முருகப் பெருமானி டம் பெற்றுச்செல்லுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

•••••••••••• விளம்பர அனுசரணை - இணுவை பிரணவன் துரை ••••••••••••

(CS/57442) J-1

OUR NATION POWER
NORTH POWER
ELECTRICAL & ELECTRONIC
Palali Road, Urumpirai, Jaffna
Marketing By
NEW GLOBAL BUSINESS SYSTEMS
Kumarkoddam, Kondavil, Jaffna, Sri Lanka.
0094 21 222 7262/ 0094 70 505 6666



Thulasi Amman Super Mart
துளசி அம்மன் சூப்பர் மாட்



+94 7050 56666
Kumarkoddam, Kondavil

NEW GLOBAL
BUSINESS SYSTEMS
ABC TOSHIBA Camelion LONEN UNITY OKTAN DP LIGHTING

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

யாழ்ப்பாணம், பெப்.8
யாழ். மாவட்டத் தாச்சி விளையாட்டுச் சங்கத்தின் 28ஆவது பொதுக்கூட்டமும், 2025ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாகத் தெரிவும் இணுவில் சங்க மண்டபத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10மணிக்கு இடம்பெறவுள்ளது. (ச-41)

## மரதன் ஓட்டம்


யாழ்ப்பாணம், பெப். 8
கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் பாடசாலை அதிபர் கே.தவகீஸ்வரன் தலைமையில் மரதன் ஓட்டப்போட்டி இன்று சனிக்கிழமை காலை 6 மணிக்கு இடம்பெறவுள்ளது. (ச-25-17)

## வலைப்பந்தாட்ட பயிற்சி முகாம்

யாழ்ப்பாணம், பெப். 8
புங்குடுதீவு அனைத்து விளையாட்டுக் கழகங்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில், யாழ். மாவட்ட வலைப்பந்தாட்டச் சங்கத்தினரால், வலைப்பந்தாட்ட பயிற்சி முகாம் புங்குடுதீவு மத்திய கல்லூரி மைதானத்தில் இன்று காலை 8.30 மணிக்கு நடத்தப்படவுள்ளது.
எதிர்வரும் மார்ச் மாதம் மகளிர் தினத்தினை முன்னிட்டு நடத்தப்படவுள்ள 16 வயதுக்குட்பட்டவர்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டித் தொடருக்கான தெரிவும் இன்று இடம்பெறவுள்ளது.
புங்குடுதீவு பிரதேசத்தைச் சேர்ந்த பாடசாலை மாணவர்கள் இந்தப்பயிற்சி முகாமில் பங்கேற்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-25)

## மரண அறிவித்தல்

தோற்றம்
08 . 03 . 1930



மறைவு
05 . 02 . 2025

### நடராசா சிவபாக்கியம்

இணுவில் கிழக்கு சிவகாமி அம்மன் கோவிலடியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா சிவபாக்கியம் கடந்த 05.02.2025 புதன்கிழமை அன்று காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம்-சின்னம்மா தம்பதியின் பாசமிகு மகளும் காலஞ்சென்றவர்களான தம்பு-பாக்கியம் மருமகளும் காலஞ்சென்ற நடராசாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கந்தையா, சுப்பையா, தங்கரத்தினம், கதிரவேலு ஆகியோரின் சகோதரியும் நவரத்தினராசா (சிவபாக்கியா மண்டப உரிமையாளர்), காலஞ்சென்ற சிவலோகநாதன் (கிளி) மற்றும் சண்முகராசா (ராசா), சிவகாமசுந்தரி (தேவி), காலஞ்சென்ற ஸ்ரீகாந்தராசா மற்றும் மகேஸ்வரி, ஸ்ரீரஞ்சன் (சுவிஸ்), செல்வராணி (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் புஸ்பராணி, தங்கரத்தினம், கிருஷ்ணபாமா, காலஞ்சென்றவர்களான யோகராணி (மாலா), நாகநாதபிள்ளை மற்றும் சாந்தி, கந்தசாமி, தனருக்ஷா, குலசேகரம் ஆகியோரின் மாமியாரும் காலஞ்சென்றவர்களான அப்பையா, சோமசுந்தரம், குமாரசாமி, அன்னலிங்கம், செல்வம், மகேஸ்வரி, சுப்பலட்சுமி, மல்லிகாதேவி ஆகியோரின் மைத்துனியும் சிவரூபன் கலைமதி, கோகிலவதனி கஜேந்திரன், ஜெகன் ஆதித்தியா, கோகிலப்பிரியா உத்தமன், சுகி நவரத்தினராசா, சுதன் சிந்துஜா, சுரேஸ்குமார் பாமினி, விசாகினி மயூரதன், கஜேந்திரன் திருவருட்செல்வி, மயூரதன், ரவீந்திரன் சாலினி, ராஜிகரன், மகிந்தன் சிந்துஜா, கஜனி, வினோதினி பகிரதன், வினோதீபன் துர்க்காயினி, வினோராஜ் பிரியங்கா, துஷாயினி நவரூபன், கபிலன், கௌசிகன், அனுராதா, லஜிதா சரவணன், பவித்திரா விஜிதன், சிதர்ஷனா, சிலக்ஷன், வானவி, விதுஷன், ரஜினா, சங்கர், ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், நேத்ரன், வியாசன், மித்திரன், அட்சயன், அபிசயன், அனுஸ்ரீ, ஆராத்தியா, கருணியா, சிவானியா, துஷிகா, சுஜீபன், சுதிக்சன், தியான், கபிஷன், துஷாந்த், ரக்ஷன், அனாவிகா, அஸ்விகா, லாருஜன், ஹரினி, சாஜகா, கபிநயா, விஷால், அபிசா, அஸ்வரன், ஆதீசன், அக்ஷரன், சந்தோஷ், ஆகாஷ், மதனன் அபிநயன், புகழன், அதிசயா, அதிசா, தனிஷா, அபிலாஷ், விஷோன், அஷிகா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.02.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரிகைக்காக காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.
இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 959 7082, 077 677 2100

சிவகாமி அம்மன் கோயிலடி,
இணுவில் கிழக்கு, இணுவில்.

(CS 22635) V-1

## மரண அறிவித்தல்

தோற்றம்
12 . 10 . 1945



மறைவு
05 . 02 . 2025

### தெய்வேந்திரம் சின்னக்கிளி (சின்னமணி)

தாவடி தெற்கு பாடசாலை வீதியைப் பிறப்பிடமாகவும், ஊரெழு மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட தெய்வேந்திரம் சின்னக்கிளி (சின்னமணி) அவர்கள் கடந்த 05.02.2025 புதன்கிழமை இறைபதம் எய்தினார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா-தங்கரத்தினம் தம்பதியரின் பாசமிகு மகளும் காலஞ்சென்றவர்களான செல்லையா- அன்னம்மா தம்பதியரின் பாசமிகு மருமகளும் செல்லையா தெய்வேந்திரம் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற பொன்னுத்துரை கனகம்மா மற்றும் பொன்னையா சுப்பிரமணியம் (மணியம்-சுவிஸ்-076 946 4155/ 0041 77921 7686), திருமதி சந்திரகுமார் பத்மாதேவி-076 037 3047, பொன்னையா சண்முகநாதன் (சுவிஸ்-0041 79355 0642/ 0041 79137 8164) ஆகியோரின் அன்புச் சகோதரியும் சுதாமதி, சந்திரகுமார், பிறேமாமலர், சரஸ்வதி, காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை, அற்புதநாதன், லீலாவதி, இராசையா, செல்வராசா ஆகியோரின் மைத்துனியும் காலஞ்சென்ற பரமசிவம் மற்றும் இராசாத்தி ஆகியோரின் சிறிய தாயாரும் பானுஜா, பிரணவன் ஆகியோரின் பெரியம்மாவும் ஷமீரா, ஹரீஷன் ஆகியோரின் அத்தையும் ஆவார்.
அன்னாரின் ஈமக்கிரியைகள் நாளை (09.02.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 - 12.00 மணி வரை அவரது வதிவிடமாகிய ஊரெழுவில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.
இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
ஊரெழு மேற்கு. குடும்பத்தினர்.

## 31ம் நாள் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும்



கடந்த 09.01.2025 வியாழக்கிழமை இறைபதமடைந்த
எங்கள் குடும்பத் தலைவர்

### அமரர் கந்தையா இரவீந்திரன்

(ஓய்வுபெற்ற கிராம அலுவலர், இணுவில் மேற்கு J/191)

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் கடந்த (06.02.2025) வியாழக்கிழமை அன்று கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (08.02.2025) சனிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற உள்ளதால் அனைத்து அன்புள்ளங்களையும் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இணுவில் மேற்கு,
இணுவில்.

குடும்பத்தினர்.

(CS 2465) V-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் சௌதார் வீதி சீரமைப்பு ஒழுங்கில்லை

## மக்கள் விசனம்

கொழும்பு, பெப்.8

மன்னாரில் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்குச் சொந்தமான சௌதார் புகையிரத நிலையப் பிரதான வீதி பல வருடங்களாக புனரமைக்கப் படாது காணப்படும் நிலையில், வீதிகளிலுள்ள பள்ளங்களை நிரப்பும் பணிக ளைக்கூட வீதி அபிவிருத்தி அதிகாரசபை ஏனோதானோவென செய்கின்றது என்று அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளார்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

குறித்த வீதியைப் புனரமைப்புச் செய்வதற்கு நிதியொதுக் கப்பட்ட போதிலும் பல்வேறு காரணங்களால் வீதி அபி விருத்திப் பணிகள் இடம்பெறாது ஒதுக்கப்பட்ட நிதியும் திரும்பிச் செல்கின்றது.

இதனால் புகையிரதப் பயணங்களுக்குக்காகச் செல்லும் சாந்திபுரம், சௌத்பார் உள்ளிட்ட பல கிராமங்களைச் சேர்ந்த மக்கள் இந்த வீதியைப் பயன்படுத்துவதில் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர்.

அதேவேளை வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் செய் யப்படும் சீராக்கும் பணிகளும் ஒழுங்கான முறையில் மேற்கொள்ளப்படுவதில்லை.

குறிப்பாக வீதிகளில் பள்ளங்களை நிரப்பும் பணிகள்கூட ஏனோ தானோ என இடம்பெறுகின்றன. அவை குறுகிய காலப்பகுதியில் சேதமடைகின்றன.

எனவே இந்த வீதியை ஒழுங்குமுறையில் புனரமைப்புச் செய்வதற்கு உரிய அதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும்- என்றனர். (ச-56,213)



# பாரி அறக்கட்டளை பண்டத்தரிப்பில்

யாழ்ப்பாணம், பெப்: 8

பாரி அறக்கட்டளை கல்விக்கான சமூகப்பணி அமையமானது தனது நிர்வாக ரீதியான செயற் பாடுகளை இலகுபடுத்தும் நோக்கில் தலைமை அலுவலகமொன்றைக் காலையடி பண்டத்தரிப் பில் நேற்றுமுன்தினம் திறந்து வைத்துள்ளது.

பாரி அறக்கட்டளையின் தலைவர் சற்குணராஜா நிகேஷ் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிர தம விருந்தினராக மானிப்பாய் இந்துக் கல்லூரியின அதிபர் துரைரட்ணம் திலீப்குமார் கலந்துகொண்டு அலுவலகத்தை திறந்துவைத்தார். (ச-125)



வடக்கு அமெ.மிஷன் பாடசாலைகளுக்கு

# அமெரிக்காவிலிருந்து வந்த ஆளுநர்சபை

யாழ்ப்பாணம், பெப்.8

வட்டுகோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, உடுவில் மகளிர் கல்லூரி ஆகியவற்றுக்கான ஆளுநர் சபையினர் அமெ ரிக்காவிலிருந்து வருகை தந்து நேற்றுமுன்தினம் வியா ழக்கிழமை குறித்த பாடசாலைகளுக்கு விஜயம் செய்தனர்.

முன்னாள் அதிபரும் ஆளுநர் சபையின் பிரதிநிதியுமான சிராணிமில்ஸ், அமெரிக்க நிர்வாக சபையைச்சேர்ந்த ஜோன்ஸைபர் மற்றும் ஜொனத்தன் ஆகியோரே பாடசா லையைப் பார்வையிட்டனர். (ச- 25,125)

# மணவாளக்கோலம்

யாழ்ப்பாணம், பெப். 8

கீரிமலை ஸ்ரீ மஹா முத்துமாரி அம்பாள் ஆலய சங் காபிஷேகமும் மணவாளக்கோலத் திருவிழாவும் நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளன.

அடியார்கள் யாவரும் சங்காபிஷேகத்தில் கலந்து கொண்டு பால்,இளநீர் புஷ்பம் போன்றவற்றை எடுத்து வந்து, தொடர்ந்து இடம்பெறும் மகேஸ்வர பூசையிலும் பங்குபற்றி அம்பாளின் இஷ்டசித்திக் களைப் பெற்றுய்யுமாறு ஆலய ஆதீனகர்த்தாவும் பிரதம குருவுமான உமாபதீஸ்வரக்குரு கேட்டுள் ளார். (ச-25, 6)

யாழ்.போதனாவில்

# ஆளணி எண்ணிக்கை அதிகரிக்கவேண்டும்!

யாழ்ப்பாணம், பெப்.8

யாழ்.போதனா மருத்துவமனையில் மருத்துவர் கள், தாதியர்கள், சுகாதார உதவியாளர்கள் உள்ளிட்ட ஆளணி எண்ணிக்கையை அதிக ரிக்க வேண்டும் என்று யாழ்.போதனா மருத்து வமனைப் பணிப்பாளர் கோரிக்கை விடுத்துள் ளார். யாழ்ப்பாணம் போதனா மருத்துவம னைக்குக் கடந்த புதன்கிழமை வடக்கு ஆளுநர் நா. வேதநாயகன் திடீர் விஜயம் மேற்கொண்ட போதே அவரிடம் இந்த விடயத்தைச் சுட்டிக்காட்டி னார். (ச- 25,66)



ஆலயத் திருவிழா

# ஒலிபெருக்கிப் பாவனை வலி.மேற்கில் கட்டுப்பாடு

யாழ்ப்பாணம் , பெப்.8

வலிகாமம் மேற்குப் பிரதேசசபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளிலுள்ள ஆலயங்களில் ஒலிபெருக்கிப்பாவனை தொடர்பில் சங்கானைப் பிரதேச செயலாளர் திருமதி கவிதா உதயகுமாரால் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.

அதன்படி திருவிழாக் காலங்களில் காலை 6 மணி தொடக்கம் காலை 7 மணி வரையும், மாலை 6 மணி முதல் இரவு 8 மணி வரையும் நான்கு ஒலி பெருக்கிகள் 100 மீற்றர் எல்லைக்குள் மட்டுமே பயன் படுத்த முடியும்.

சாதாரண நாள்களில் ஒலிபெருக்கிப்பெட்டி மூலம் ஆலய வளாகத்தில் மாத்திரம் ஒலிபரப்புச் செய்யமுடியும்.

பரீட்சைக் காலங்களில் ஒலிபெருக்கிப் பாவனை முற்றா கத் தடை செய்யப்பட்டுள்ளது.

ஒலிபெருக்கிப் பாவனைக்குக் கிராம அலுவலரின் சிபார்சு பெற்றுக் கோரிக்கையைப் பொலிஸாரிடம் முன்வைக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-22,66)

# கழிவகற்றல் பொறிமுறை யாழில் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், பெப்.8

கழிவகற்றல் தொடர்பில் விழிப்புணர்வுச் செயற்பாடுகளை உள்ளூ ராட்சி அமைப்புகள் பிரதேச ரீதியாக ஆரம்பிப்பதற்கான பொறிமு றையை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று யாழ். மாவட்டச் செயலர் ம. பிரதீபன் சுட்டிக்காட்டியுள்ளார்.

யாழ்.மாவட்ட சுற்றாடல் குழுக்கூட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்ற போதே அவர் இதனைக் குறிப்பிட்டார். இந்தக் கலந்துரையாடலில் நகர்ப்புறங்களில் காணப்படும் கழிவகற்றல் பிரச்சினைகள், திண்ம கழிவு முகாமைத்துவம், வளி மாசு மற்றும் டெங்குக் கட்டுப்பாட்டு தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டன. (ச-41-27,66)



# காற்று மாசு யாழில் அவதானிப்பு

யாழ்ப்பாணம், பெப். 8

யாழ். மாவட்டத்தில் வளி மாசு படுதல் தொடர்பாக சுற்றாடல் அதிகாரசபையினால் கண்கா ணிப்பு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன என யாழ்.மாவட்டப் பதில் செயலர் ம. பிரதீபன் தெரிவித்துள்ளார்.

இதற்கான இயந்திரங்கள் பழு துபார்க்கப்பட்டு அவை தற் போது மீளப் பொருத்தப்பட்டுள் ளன. அதனடிப்படையில் யாழ்ப்பாணத்தில் வளி மாசுபடு தலின் தன்மைகள் குறித்து அவதானிக்கப்பட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்படுகின்றன என் றும் அவர் மேலும் தெரிவித் தார். (ச- 25, 27)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மூன்றாம் வகுப்பு

# ஆசன முன்பதிவு விரைவில் நீக்கம்

கொழும்பு, பெப்.8

சில தொடருந்துச் சேவைகளில் மூன்றாம் வகுப்பு ஆசன முன்பதிவு வசதியை நீக்க தொடருந்துத் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

இந்த நடவடிக்கை அடுத்த மாதம் 10 ஆம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படும் என்று அந்தத் திணைக்களம் தெரிவித்துள்ளது. அதற்கமைய, கொழும்பு கோட்டை - பதுளை, பதுளை - கொழும்பு கோட்டை, கொழும்பு கோட்டை - தலைமன்னார் மற்றும் தலைமன்னார் - கொழும்பு கோட்டை இடையே இயங்கும் தொடருந்துகளிலேயே குறித்த மாற்றம் ஏற்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

லசந்த கொலைவழக்கு

# முடிவை மறுபரிசீலனை செய்ய சட்டமா அதிபருக்கு உத்தரவு!

## ஜனாதிபதி அநுர அதிரடி!

கொழும்பு, பெப். 8

லசந்த விக்கிரமதுங்கவின் படுகொலையுடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் சிலரை விடுவிக்குமாறு, சட்டமா அதிபர் பரிந்துரைத்த நிலையில், அவரின் முடிவு தொடர்பில் மறுபரிசீலனை செய்யுமாறு ஜனாதிபதி அநுரகுமார அறிவுறுத்தியுள்ளார்.

லசந்த விக்கிரமதுங்கவின் படுகொலையுடன் தொடர்புடைய சிலசந்தேகநபர்களை விடுவிக்குமாறு சட்டமா அதிபர் பரிந்துரைத்தமை நாடளாவிய ரீதியில் தற்போது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. இதையடுத்தே, ஜனாதிபதி இந்த விடயம் தொடர்பில் சட்டமா அதிபருடன் கலந்துரையாடல் நடத்தியுள்ளார்.

ஜனாதிபதியுடனான கலந்துரையாடலின்போது, சாட்சிகள் மூன்று சந்தேகநபர்களுக்கு எதிராக வழங்கிய வாக்குமூலங்களை மீளப்பெற்றுக் கொண்டதாக சட்டமா அதிபர் தெரிவித்துள்ளார். ‘2020ஆம் ஆண்டிலும், 2021ஆம் ஆண்டிலும் இந்த வாக்குமூலங்கள் திரும்பப் பெறப்பட்டுள்ளன. ஆதலால், சம்பந்தப்பட்ட நபர்களை விடுவிக்காவிட்டால் அவர்கள் அடிப்படை உரிமை மீறல் வழக்குகளைத் தாக்கல் செய்யக்கூடும்’ என்று சட்டமா அதிபர் ஜனாதிபதியிடம் தெரிவித்துள்ளார். இதைத் தொடர்ந்தே, அவரின் சட்டமா அதிபரின் அறிவுறுத்தல் தொடர்பில் மறுபரிசீலனையில் ஈடுபடுமாறு ஜனாதிபதி அநுர கண்டிப்பாக உத்தரவை விடுத்துள்ளார். (அ-ம-6)


# UNIVERSITY OF JAFFNA
# INVITATION FOR BID

1. The Chairman, Procurement Committee of University of Jaffna invites sealed bids from eligible and qualified bidders for the following works.

| No | Bid ID | Description of Work | Estimated Cost (Rs. In million) excluding VAT | Construction Period (No of Calendar Days) | Required CIDA Grade | Required Bid Security Amount and Period | Non-refundable fee |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | YA/CWP/RE/C1/2025-01 | Construction of Study Hall for the Faculty of Allied Health Sciences, University of Jaffna | 8.2 | 75 | C8 or C7 | Rs. 85,000.00 26.06.2025 | Rs. 2,500.00 |
| 2 | YA/CWP/RE/C1/2025-02 | Refurbishment of Computer Unit at Board Room, Faculty of Science, University of Jaffna | 6.7 | 60 | C8 or C7 | Rs. 70,000.00 26.06.2025 | Rs. 2,500.00 |
| 3 | YA/CWP/RE/C1/2025-03 | Construction of Waiting Area [30’- 0”×30’- 0”] for Students at CODL, University of Jaffna | 5.4 | 60 | C8 or C7 | Rs. 55,000.00 26.06.2025 | Rs. 2,500.00 |
| 4 | YA/CWP/CW/C2/2025/01 | Supply, Installation and Commissioning of Piped Medical Gas System for the Clinical Department, Faculty of Medicine, University of Jaffna | 33.9 | 75 | EM3 or EM2 | Rs. 340,000.00 26.06.2025 | Rs. 9,000.00 |

2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure.
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of Building Construction for Bid No. 1, 2 &3 and Electrical & Mechanical for Bid No. 4 with the Institute for Construction Industry Development Authority (CIDA) as indicated in the above table.
4. Interested bidders may obtain further information from Senior Assistant Registrar, Capital Works & Planning Branch, University of Jaffna and inspect the bidding documents at the same address on any working day from 9:00hrs to 16:00hrs. Contact numbers are: Phone: 021 2219201 Fax: 021 221 9201.
5. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on submission of a written application to the Senior Assistant Registrar, Capital Works & Planning Branch, University of Jaffna, Thirunelvely, Jaffna from 10th February 2025 until 26th February from 9:00 hrs to 16:00 hrs and upon payment of a non-refundable fee detail given above table to be deposited to the People’s Bank, University of Jaffna branch with the Reference No "970000060000276" should be filled in the Account Number column in the Deposit Slip.
6. Sealed Bids shall be delivered or sent by registered post to the Senior Assistant Registrar, Capital Works & Planning Branch, University of Jaffna, Thirunelvely, Jaffna P.O Box 57 or be deposited in the tender box kept in the Capital Works & Planning Branch to reach on or before 10.00 hrs on 27th February 2025. Bids will be opened soon after closing, at 10.00 hrs on 27th February 2025 at the same venue in the presence of the bidders’ representatives who choose to attend.
7. Bids shall be valid at least for a period of 91 Days from the closing date of Bids submission or any extended date.
8. All Bids shall be accompanied by a Bid Security which shall be;
   - In the form included in the Section 09 in the Bidding document.
   - In favour of "Vice Chancellor, University of Jaffna."
   - For the amount indicated in the above table against each work.
   - Issued by one of the agencies indicated in the clause 16.0 of the Section 5.
9. Pre Bid meeting will be held at Capital Works & Planning Branch, University of Jaffna, Thirunelvely at 10.00 hrs on 19th February, 2025.

Chairman,
Department Procurement Committee,
University of Jaffna,
07/02/2025

(CR244278) J-1




400 வருடங்கள் பழமைவாய்ந்த

# வட்டுக்கோட்டை துணவி ஆலயம்: மீளுருவாக்கும் பணிகள் ஆரம்பம்!

வட்டுக்கோட்டை துணவி ஆலயத்தை மீள் உருவாக்கம் செய்யும் பணிகள் நேற்று வெள்ளிக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டன.

மிகத் தொன்மை வாய்ந்த வழிபாட்டுத் தலமான இந்த ஆலயம் பல ஆண்டு காலமாகக் கவனிப்பார் இன்றிக் காணப்பட்ட நிலையில் அதனை மீளுருவாக்கம் செய்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இதன்படி, தற்போது அமெரிக்காவில் வசிக்கின்ற கைதடியைச் சேர்ந்த கலாநிதி சிவயோகநாதனின் மகள் பாலயோகஸ்தினி சிவயோகநாதன் ஆலயத்தை மீள் உருவாக்கம் செய்வதற்குரிய நிதி உதவியை வழங்கியுள்ளார்.

நேற்று நடைபெற்ற ஆலய மீளுவுருவாக்க ஆரம்பப் பணிகளில் யாழ்ப்பாண மரபுரிமை மையத்தின் தலைவர் வாழ்நாள் பேராசிரியர் பரமு புஸ்பரட்ணம், மரபுரிமை மையத்தின் உபதலைவர் சத்திர சிகிச்சைப் பேராசிரியர் ரவிராஜ், ஆலயத்தினை மீள்உருவாக்கம் செய்வதற்குரிய நிதி உதவியினை வழங்கிய பாலயோகஸ்தினி சிவயோகநாதனின் தந்தை கலாநிதி சிவயோகநாதன், யாழ்ப்பாணம் மரபுரிமை மையத்தின் செயலாளர் ரமேஸ், பேராதனைப் பல்கலைக்கழகத்தின் வரலாற்றுத் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் ஜெயதீஸ்வரன், மீளுருவாக்கம் செய்யும் முக்கிய பணி செயற்பாட்டாளர் கபிலன், யாழ்ப்பாண மரபுரிமை மையத்தின் வரதராஜன் பார்த்திபன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (ம-66)

## இலங்கைக்கு...

முன்தினம் மாலை இடம்பெற்ற கலந்துரையாடல்களின் போதே இந்த இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

ஆரம்பத்தில் பணியாளர்கள் மட்ட இணக்கப்பாடு காணப்பட்ட நிலையில், தற்போது அதிகாரிகள் மட்டத்திலும் இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது. நாணய நிதிய நிறைவேற்றுச் சபை அனுமதி வழங்கும் பட்சத்தில் அந்த நிதி இலங்கைக்கு இனி வழங்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசாங்கத்துக்கு...

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
ஆளுங்கட்சியினர் ராஜபக்சக்கள், ராஜபக்சக்கள் என்றுதான் கூறிவருகின்றனர். ராஜபக்ச என்ற நாமம் இல்லாமல் அரசாங்கம் செயற்படாது. அந்த நிலைமைக்குத்தான் அரசாங்கம் தற்போது வந்துள்ளது. கிராமிய மக்களின் சக்தி மஹிந்தவை மையப்படுத்தித்தான் உள்ளது. இதை அறிந்தே அவரின் நற்பெயருக்குக் களங்கம் ஏற்படுத்தவேண்டும் என்று அரசாங்கம் தற்போது செயற்பட்டு வருகின்றது.

அரகலயப் போராட்டத்தில் வீடுகளையும், சொத்துக்களையும் இழந்த அரசியல்வாதிகளுக்கு மதிப்பீட்டுத் திணைக்களம் வழங்கிய மதிப்பீட்டுக்கு அமையவே இழப்பீடு வழங்கப்பட்டுள்ளது. அதே திணைக்களம்தான் ராஜபக்ச தற்போது வசிக்கும் வீட்டின் பெறுமதியையும் மதிப்பிட்டுள்ளது. ராஜபக்சவை விமர்சிக்கும்போது மதிப்பீட்டுத் திணைக்களத்தின் மதிப்பீடு சரியென்றும், அரசியல்வாதிகள் இழப்பீட்டைப் பெறும்போது மதிப்பீடு தவறு (மிக அதிகம்) என்றும்தான் அரசாங்கம் கூறுகின்றது. இதுதான் அரசாங்கத்தின் இரட்டை நிலைப்பாடு.

சட்டமா அதிபர் விடயத்திலும் இப்படித்தான் நடக்கின்றது. ராஜபக்சக்களை கைது செய்யுமாறு ஆலோசனை வழங்கினால் சட்டமா அதிபரை நல்லவர் என்கின்றனர். ஏதேனும் விடயங்களில் சாட்சியங்கள் இல்லை எனக் கூறினால் சட்டமா அதிபருக்கு எதிராகச் சர்ச்சையை ஏற்படுத்துகின்றனர் - என்றார். (அ-ம-44)

## அமெரிக்காவின்...

அவர் மேலும் தெரிவித்ததாவது:-
ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தைக் கொண்டுவந்த நாடு அமெரிக்காவே. தற்போது மனித உரிமைகள் பேரவையில் இருந்து அமெரிக்கா வெளியேறவுள்ளதால் இலங்கைக்கு எதிரான தீர்மானம் வலுவற்றதாகும். இதனால், இந்த வாய்ப்பை இலங்கை சரிவரப் பயன்படுத்தவேண்டும்.

அமெரிக்காவின் பிரேரணையை மறுதலிக்கும் வகையில் உள்நாட்டில் ஒருதசாப்த காலத்தை மையப்படுத்திய மனித உரிமைகள் செயற்பாட்டுப் பொறிமுறையொன்றை முன்மொழிவதற்கும், அதனை மேற்குல நாடுகள் மத்தியில் கலந்துரையாடி ஆதரவைப் பெறுவதற்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது.

அதேநேரம், போரின் பின்னரான சூழலில் அதிக உணர்திறன்கொண்ட விடயங்களாக இருக்கும் காணாமலாக்கப்பட்டவர்கள் தொடர்பான பிரச்சினைகள், பொதுமக்களின் மரணங்கள் சம்பந்தமான விடயங்களை கையாள்வதற்கான, உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை நிறுவுதல், இழப்பீட்டுப் பணியகத்தைச் செயற்படுத்தல் உள்ளிட்ட விடயங்களைச் செயற்படுத்துவதற்கான முன்மொழிவுகளையும் மேற்கொள்வற்கு நல்லதொரு சூழல் ஏற்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக்கான இலங்கையின் வதிவிடப் பிரதிநிதி இந்த விடயத்தில் விரைந்து செயற்படவேண்டும்.

அதேநேரம், வடக்குக் கிழக்கில் தமிழ்மக்கள் தமது தாய்மொழியில் அரசசேவைகள் உள்ளிட்ட அனைத்து விடயங்களையும் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்திக்கொடுப்பதோடு நாடாளாவிய ரீதியில் எந்தவொரு இலங்கைப் பொதுமகனும் மொழிரீதியாக இரண்டாந்தரப் பிரஜையாக உள்ளேன் என்ற மனோநிலை உருவாகாதவாறு அரசமொழிக்கொள்கை அமுலாக்கப்படுவது அவசியம் - என்றார். (அ-ம-6-66)

## மாவை...

பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. மறைந்த மாவை.சோ.சேனாதிராஜாவின் இறுதிச் சடங்குகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. அவரின் புகழுடல் தகனம் செய்யப்பட்ட தச்சன்காடு இந்து மயானத்தில், 'மாவையின் மரணத்துக்குக் காரணமான தமிழரசுக் கட்சியின் துரோகிகள்' என்னும் தலைப்பிடப்பட்ட பதாகை காட்சிப்படுத்தப்பட்டிருந்தது. அந்தப் பதாகையில் சுமந்திரன், சேயோன், பீற்றர் இளஞ்செழியன், சாணக்கியன், ரஞ்சினி, கலையரசன், சத்தியலிங்கம், சயந்தன், குலநாயகம், துரைராஜசிங்கம், சாந்தி ஸ்ரீஸ்கந்தராசா, கமலேஸ்வரன், இரத்தினவேல், கண்ணதாசன், சீ.வீ.கே.சிவஞானம், பரஞ்சோதி, செல்வராசா ஆகியோரின் பெயர்கள் இருந்தன.

இந்தப் பதாகை காட்சிப்படுத்தப்பட்டமையால் தனக்கு உயிரச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகவும், அதனால்தான் தன்னால் இறுதிச் சடங்கில் கலந்துகொள்ளமுடியாமல் போனதாகவும் தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் சீ.வீ.கே.சிவஞானத்தால் முறைப்பாடு வழங்கப்பட்டிருந்தது. இந்த முறைப்பாட்டின் மீதான விசாரணைகளே மாவை சேனாதிராஜாவின் குடும்பத்தினரிடம் முன்னெடுக்கப்பட்டன என்று தெரிவிக்கப்படுகின்றது. (அ-ம-26-66)

## இந்திய மீனவர்களில்...

மன்னார்க் கடற்பரப்பில் அத்துமீறிய மீன்பிடியில் ஈடுபட்ட 17 இந்திய மீனவர்கள் கடந்த டிசெம்பர் மாதம் 24ஆம் திகதி கைது செய்யப்பட்டனர். அவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்ட நிலையில், அவர்களுக்கு எதிரான நீதிமன்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுவந்தன. இந்த வழக்கு நேற்று விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போது, கைதுசெய்யப்பட்ட 17 மீனவர்களில் இரண்டு மீனவர்கள் முன்பும் ஒருதடவை இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறியதுடன், தற்போது இரண்டாவது தடவையாகவும் அத்துமீறியதால் அவர்களுக்கு இரண்டு வருடங்கள் கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

ஏனைய 15 மீனவர்களில் 13 மீனவர்கள் ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டனர். விடுவிக்கப்படாத இருவரிடம் அவர்களின் கைவிரல் அடையாளம் பெறப்படாத காரணத்தால் அவர்கள் மீண்டும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (அ-ம-56)

## லசந்த...

இது தொடர்பில் பிரதமர் ஹரிணி அமரசூரிய மேலும் தெரிவித்ததாவது:-
லசந்த விக்கிரமதுங்கவின் படுகொலைக்கு நீதியை நிலைநாட்டுவதில் அரசாங்கம் உறுதியுடன் உள்ளது. ஆதலால், இது தொடர்பில் ஒருநாள் சபை ஒத்திவைப்பு விவாதத்தை நடத்துவதற்கும் அரசாங்கம் தயாராக உள்ளது. புதிய குற்றப்பத்திரம் தாக்கல் செய்வதற்கும் மீளாய்வு செய்யப்படும். இதுமிகவும் முக்கியமானதொரு விடயம் என்பதை நானும் ஏற்றுக்கொள்கிறேன். ஏனெனில் [illegible] இந்த விடயத்தில் நீதி கிடைக்கவேண்டும் என்று கோருகிறது. தற்போதைய நிலைவரம் குறித்து ஜனாதிபதி சட்டமா அதிபருடன் கலந்துரையாடலில் ஈடுபட்டார். அவசியமாயின் புதிய விசாரணைகளை மேற்கொள்ளவும், சாட்சியங்களைத் திரட்டவும் ஆலோசிக்கப்படும். அதற்கான வலியுறுத்தலை சட்டமா அதிபரிடம் முன்வைப்பேன்.

லசந்தவின் மகளான அஹிம்சா விக்கிரமதுங்க அனுப்பிவைத்த கடிதம் எனக்குக் கிடைத்தது. அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களைப் பார்த்து வேதனையடைந்தேன். அதிகளவில் கரிசனை கொண்டுள்ளேன். பதில் கடிதம் அனுப்புவதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளேன். லசந்த விக்கிரமதுங்கவுக்கும் அவரது குடும்பத்தாருக்கும் நீதி கிடைக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் என்றும் உறுதியாகவே உள்ளோம் - என்றார். (அ-ம-44)

## 19 பவுண்...

யாழ்ப்பாணம் திருநெல்வேலிப் பகுதியில் 19 பவுண் நகைகளைத் திருடிய குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

வீட்டின் உரிமையாளர்கள் கோப்பாய் பொலிஸாரிடம் முன்வைத்த முறைப்பாட்டுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் அடிப்படையிலேயே, முறைப்பாட்டாளர்களின் உறவு முறையான இளைஞர் கைதுசெய்யப்பட்டுள்ளார். அவரிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ-ம-26)

## இந்திய...

இலங்கைக் கடற்படையால் கைதுசெய்யப்பட்டு, இலங்கைச் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அனைத்து இந்திய மீனவர்களும் உடன் விடுவிக்கப்படவேண்டும் என்று வலியுறுத்தி இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

தமிழகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருப்பவர்களே, நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி தலைமையில் இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர் என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. இலங்கைக் கடற்படையினரால் இந்திய மீனவர்கள் கைதுசெய்யப்படுவது தொடர்கதையாக உள்ளது. எனவே, இந்த விடயத்துக்கு விரைவில் முற்றுப்புள்ளி வைக்கவேண்டும். இந்திய மீனவர்கள் சுதந்திரமான முறையில் கடற்றொழிலில் ஈடுபடுவதற்கு இந்திய மத்திய அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் வலியுறுத்தினார்கள்.

இலங்கைச் சிறைகளில் இதுவரை 100க்கும் மேற்பட்ட தமிழக மீனவர்கள் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். அத்துடன், 210 படகுகள் இலங்கை அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ளன. மீனவர்களும், அவர்களின் படகுகளும் எந்த நிபந்தனையும் இல்லாமல் விடுவிக்கப்படவேண்டும் என்றும் இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் மேலும் சுட்டிக்காட்டியுள்ளனர். (அ-ம-இ)

## ரஷ்ய...

59 பேர் உயிரிழந்துள்ளனர் என்று வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-
2025ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 20ஆம் திகதிவரை வெளிவிவகார அமைச்சுக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் 584 இலங்கையர்கள் ரஷ்ய இராணுவத்தில் இணைக்கப்பட்டுள்ளனர். ஆனால், அவர்கள் பலவந்தமாக இணைக்கப்பட்டனர் என்பதற்குரிய எவ்வித தகவலும் இல்லை. எனினும், இலங்கையர்களை மீட்டு மீள இலங்கைக்கு அழைத்துவரக்கூடிய முயற்சிகள் தொடர்ச்சியாக எடுக்கப்பட்டுவருகின்றன - என்றார்.

அத்துடன், ரஷ்ய இராணுவத்தில் இணைந்து உயிரிழந்தவர்களின் பெயர்ப்பட்டியலையும் அமைச்சர் விஜித ஹேரத் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளார். (அ-ம-44)

## மின்சாரம்...

தனது வீட்டில் உள்ள கொய்யா மரத்தில் சிறுமி ஏறி விளையாடியுள்ளார். தவறுதலாக கீழே விழுந்தபோது நீர் இறைக்கும் இயந்திரத்துக்குச் சென்ற மின்னிணைப்பில் சிக்கியதையடுத்தே, மின்சாரம் தாக்கி அந்தச் சிறுமி சம்பவ இடத்தில் உயிரிழந்தார். சிறுமி வவுனியா மருத்துவமனைக்கு உடனடியாகக் கொண்டு செல்லப்பட்ட போதிலும், அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டார் என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். புளியங்குளம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ-ம-18-110)

## தேசிய...

கொழும்பு றேஸ் ஹோர்ஸ் மைதானத்தில் நேற்று இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் மகாஜனக் கல்லூரியை எதிர்த்து, குருநாகல் மலியதேவ மகளிர் கல்லூரி அணி மோதியது.

நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரண்டு அணிகளும் தலா ஒரு கோலைப் பெற்றிருந்தன. இதனால் சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. முடிவில் மகாஜனக் கல்லூரி 3:2 என்ற கோல்கள் கணக்கில் வெற்றி பெற்று சம்பியனானது. (அ-ம-66)

## யாழ்...

நேற்றைய முதல்நாள் நிலைவரத்தின்படி யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி முன்னிலையில் உள்ளது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் இந்த ஆட்டம் இடம்பெற்றுவருகின்றது. நேற்றைய முதலாவது நாளின்போது முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி அணி அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 172 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கொழும்பு இந்துக்கல்லூரி அணி முதலாவது இன்னிங்ஸுக்காக அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 91 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக்கொண்டது. இரண்டாவது இன்னிங்ஸுக்காகக் களமிறங்கிய யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி அணி நேற்றைய நாள் முடிவில் இரண்டு விக்கெட்டுகளை இழந்து 71 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. தற்போதைய நிலவரத்தின் அடிப்படையில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி 152 ஓட்டங்கள் முன்னிலையில் உள்ளது. இதனால், இன்றைய நாளின் முதற்பகுதியுடன் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி ஆட்டத்தை இடைநிறுத்தி கொழும்பு இந்துவை துடுப்பெடுத்தாடப் பணிக்கும் சாத்தியங்கள் உள்ளதாகக் கருதப்படுகின்றது. (அ-ம-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு


**யாழ்ப்பாணம் வடமராட்சி உடுப்பிட்டியில் 10 பரப்பு காணி விற்பனைக்குண்டு.**

- உடுப்பிட்டி சன்னதி கோயில் செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்
- நல்ல சூழல், நன்னீரூற்று, நிலப்பரப்பு
- பொக்கன் சந்திக்கு அருகாமையில் உடுப்பிட்டி வாசிகசாலை சந்தி 300 மீட்டர் தூரம்
- சன்னதி முருகன் கோயில் 2 கிலோமீற்றர் கெருடாவில் கந்தசாமி கோயில் 200 மீற்றர் தூரம்.
- வழி இலக்கம் 751 மற்றும் 767 அரச, தனியார் பேருந்து செல்லும் பிரதான காபற் வீதி
- பார்வை நேரம் காலை 8 மணி முதல் மாலை 6.00 மணி வரை.

தொடர்பு: 077 288 0152
076 017 1105


## மரண அறிவித்தல்

மண்ணில் 16 . 02 . 1930



விண்ணில் 06 . 02 . 2025

### சபாநாயகம் இரத்தினராசா
**(இளைப்பாறிய கச்சேரி உத்தியோகத்தர்)**

வல்வெட்டியை பிறப்பிடமாகவும் சுழிபுரம் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சபாநாயகம் இரத்தினராசா அவர்கள் நேற்றுமுன்தினம் (06.02.2025) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாநாயகம்-முத்தாச்சிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான குணரத்தினம்-செல்லம் தம்பதியினரின் அன்பு மருமகனும் பரமேஸ்வரியின் ஆருயிர்க்கணவரும் சிவபாக்கியம், தங்கரத்தினம், நாகரத்தினம் ஆகியோரின் பாசமிகு சகோதரரும், சோதிராசா, திலகராசா, பாலராசா, கலாவதி ஆகியோரின் அன்புத் தந்தையும் லோகேஸ்வரி, புனிதமலர், மனோன்மணி, செந்திநாதன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ராகுலன்-Brigitte, வைஸ்ணவி- Jay Karnic, அருண்-அஞ்சலி, சோபனா-சிவரூபன், தினேஸ், நிமேஸ்-சந்தியா, நிரோஷ், சுதன்-விஸ்ணுஜா, காஞ்சனா-சாயித்தியன் ஆகியோரின் அன்புப் பேரனும், ஒலிவியா, இந்திரா, வில்லியம்ஸ் கரன், ஆதிரன், சாத்விகா ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.02.2025) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடிநிலை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
தி.செந்திநாதன் (மருமகன்)
(ஓய்வுபெற்ற இலங்கை வங்கி முகாமையாளர்)
077 123 4638

(CS 2462) V-1

# இ.போ.ச. சாரதி மீது சரமாரி வாள்வெட்டு!

யாழ்ப்பாணம், பெப். 8

யாழ்ப்பாணத்திலிருந்து முல்லைத்தீவு நோக்கி பயணிகளை ஏற்றிச்சென்ற இலங்கைப் போக்குவரத்துச்சபை சாரதி மீது விசுவமடுப் பகுதியில் வைத்து இனந் தெரியாத நபர்கள் வாள்வெட்டுத் தாக்கு தலை நடத்தியுள்ளனர்.

தாக்குதலுக்கு உள்ளான சாரதி தர்மபுரம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேல திக சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார். பயணிகளை இறக்குவதற்காக பேருந்து நின்றபோதே இந்தத் தாக்குதல் நடத்தப் பட்டுள்ளது. புதுக்குடியிருப்பு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற் கொண்டுவருகின்றனர். (ம-113)


### பெண் சமையலாளர் தேவை

குடும்பம் ஒன்றிற்கு மானிப்பாய் வீதி, ஆறுகால் மடத்திலிருந்து 1Km க்குள் வதியும் பெண் சமையலாளர் தேவை.

075 944 4601

### மலிவு விற்பனை

150/- இற்கு விற்பனை செய்யப்படும் அனைத்து பூங்கன்றுகளும் 100/- விற்கு விற்பனை செய்யப்படுகின்றன.

075 944 4601

### காணி விற்பனைக்கு

55 New செம்மணி வீதி கல்வியங்காட்டில் 2 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
(கிணற்றுடன்)- tube well,
நல்லூர் கோவில் 1.7 km,
கல்வியங்காடு சந்தி 350m
தொடர்புகளுக்கு:

077 185 4870

### வீடு வாடகைக்கு தேவை

வங்கி ஊழியர் ஒருவரின் குடும்பத்திற்கு யாழ்நகர், கச்சேரி ,சுண்டுக்குளி, நல்லூர், கல்வியங்காடு, கோவில் வீதி ஆகிய இடங்களை அண்டியதாக வீடு வாடகைக்கு தேவை.

தொடர்பு: 077 710 6614

### வீட்டுடன் காணி விற்பனைக்கு

கல்வியங்காடு சந்தியிலிருந்து 100m தூரத்தில் வீதி ஓரமாக உள்ள வீடும் 1 பரப்பு 3 குளி கொண்ட காணியும் நல்ல தண்ணீர் கிணற்றுடன் விற்பனைக்கு உண்டு.

(CS/57430) J-1

தொடர்பு:- 077 229 4985

### காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் பலாலி றோட் ஊரெழுவில் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 20 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**

- பலாலி றோட் ஊரெழு பிள்ளையார் கோவில் வடக்கு வீதியில் இருந்து 300m
- பலாலி-புன்னாலைக்கட்டுவன் சந்தியில் இருந்து சுன்னாகம் செல்லும் பிரதான வீதியில் இருந்து 300m இருவழிப் பாதை கொண்டது.
- நல்ல தண்ணீர் ஊற்று, சிவப்பு மண், நல்ல சூழல் வீடுகள் அமைப்பதற்கு நல்ல அமைவிடம்.

(CS/2450) J-1

தொடர்பு: 077 623 4204
076 755 8606


## கையூட்டுப்பெற்ற தபால் ஊழியருக்கு 28 வருட சிறை

கொழும்பு, பெப்.8

வெளிநாட்டிலிருந்து நாட்டுக்கு இறக்கு மதி செய்யப்பட்ட கமராக்களை வரி செலுத்தாமல் விடுவிப்பதற்காக வர்த்த கர் ஒருவரிடமிருந்து 11,000 ரூபா கையூட்டுப் பெற்றாரென கொழும்பு மத்திய தபால் நிலையத்தின் அலுவலக உதவி யாளருக்குக் கொழும்பு மேல் நீதிமன்றம் 28 ஆண்டுகள் கடுங் காவல் சிறைத் தண்டனை விதித் துள்ளது. கையூட்டல் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக் குழுவால் குறித்த நபருக்கெதிராக கடந்த 2016 செப் ரெம்பர் 19 ஆம் திகதி கொழும்பு மேல் நீதிமன்றத் தில் குற்றப்பத்திரி கை தாக்கல் செய் யப்பட்டமை குறிப் பிடத்தக்கது. (ச-இ)


STS HOSPITAL

## ORTHODONTICS TREATMENTS

பல் முக சீராக்கல் சிகிச்சைகள்

எமது STS வைத்தியசாலையில்
பல் முக சீராக்கல் சத்திர சிகிச்சை நிபுணர்

**Dr. P.Sathiyakumar**
Consultant Orthodontist

அவர்களிடம் தொடர்ந்தும் சிகிச்சைகளை பெற்றிடுங்கள்
ஆலோசனைகளைப் பெற பதிவுகளை மேற்கொள்ளுங்கள்



பதிவுகளுக்கு
021 222 6600 / 021 222 6611

இல 130, முதலாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

### காணி விற்பனைக்கு

பொஸ்கோ பாடசாலைக்கு முன்பாக சோமசுந்தரம் அவென்யுவில் 3.5 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.


(CS/57431) J-1

தொடர்பு:- 076 342 4705

### விவசாயிகளுக்கு

இந்தியாவில் இருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட Greaves MK12, MK 20 நீர் இறைக்கும் இயந்திரம் (Water Pump) இப்பொழுது எம்மிடம். அத்துடன் இலங்கையில் முதன் முதலாக அறிமுகப்படுத்துகின்றோம். ஒரே என்ஜினிற்கு விரும்பிய எரிபொருளை நீங்களே தெரிவு செய்யலாம். (மண்ணெண்ணெய், பெற்றோல், டீசல்)

"நாங்கள் உங்களோடு"



**ஆர்க் . என் . கம்பனி**

- 150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 4021
- A9 வீதி, எழுதுமட்டுவாழ். 070 191 3571
- A9 வீதி, பரந்தன் சந்தி, பரந்தன் 021 228 2020

Hotline: 071 535 7799 / 071 973 9917

CS 57446) V-1




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 08.02.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.